ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2164/21 - 2020 පෙබරවාරි මස 26 වැනි බදාදා - 2020.02.26
*2164/21 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை

**2020 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4 - 3/17/2019/D/23.
பி.செ. குறிப்பு இல. : LAN/ ACQUT/01/ 01-01.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன,
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
“மிஹிகத மெதுர”, இல.1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2020, பெப்புருவரி 19.

**1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்**:- பிரதேச செயலாளர், கோரளைப்பற்று வடக்கு வாகரை.

**2. காணியின் விபரம்**:- கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில், கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில், 212 மத்திய வாகரை உத்தியோகத்தர் பிரிவில் வாகரை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2019.07.10 ஆந் திகதிய BT/KPN/2019/131 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு ‘A’ - முஹத்துவர பூமி - விஸ்தீரணம் : 0.4047 ஹெக்டயார்**

வடக்கு : எஸ். ஆம்ஸ்ட்ரோன் உரிமை கோரும் முஹத்துவர பூமியின் வீட்டுத்தோட்டம் மற்றும் கடல் ; கிழக்கு : கடல் மற்றும் உரிமை கோருவோரை கண்டுபிடிக்க முடியாத முஹத்துவர பூமியின் வீட்டுத்தோட்டம் ; தெற்கு : உரிமை கோருவோரை கண்டுபிடிக்க முடியாத முஹத்துவர பூமியின் வீட்டுத்தோட்டம் மற்றும் பனிச்சன்கேனி ஆறு ; மேற்கு : பனிச்சன்கேனி ஆறு மற்றும் எஸ். ஆம்ஸ்ட்ரோன் உரிமை கோரும் முஹத்துவர பூமியின் வீட்டுத்தோட்டம்.

03 - 419

G32097 - 26 (2020/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.